





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 24.10.2018


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- புத்தகங்கள்










# தமிழக நிகழ்வுகள்

- திருச்சி அருகே உள்ள உத்தமசீலி என்ற கிராமத்தில், சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் போது 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த **பாறைக் கல்வெட்டு** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த பாறைக் கல்வெட்டு **மகிஷா சுரமர்த்தினி** என்ற பெண் கடவுளின் உருவத்தை பிரதிபலிப்பதாக உள்ளது.
  - மேலும் அங்கு விக்ரம சோழனின் கல்வெட்டு ஒன்று சிதைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- குறிப்பு
  - தமிழ்நாட்டில் சாளுக்கிய சோழ மரபினை உருவாக்கிய முதலாம் **குலோத்துங்க சோழனின்** மகன் **விக்ரம சோழன்** ஆவார்.

- ஆஸ்திரேலியாவானது கல்வி, சாலைப் பாதுகாப்பு தொழில்நுட்பம், நகர்புற உட்கட்டமைப்பு, மீன்வளத்துறை மற்றும் விவசாயத் துறை ஆகியவற்றில் உள்ள வாய்ப்புகளை ஆராய வருகின்ற 2019ம் **ஆண்டின் உலக முதலீட்டாளர் மாநாட்டில் தமிழகத்துடன் இணைந்து செயல்பட இருக்கின்றது.**
  - தற்போது ஆஸ்திரேலியா பல்கலைக்கழங்களுக்கும், தமிழக கல்வி நிலையங்களுக்கும் இடையே 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயல்முறையில் உள்ளன.

# இந்திய நிகழ்வுகள்

- வட மத்திய இரயில்வேயானது **(North Central Railways - NCR)** இரண்டு கைப்பேசி செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - என்.சி.ஆர் ராஸ்தா**(NCR RASTA)** – தனது பணியாளர்களுக்காக
  - யாத்ரி ராஸ்தா **(Yatri RASTA)** – தனது பயணிகளுக்காக
  - NCR – RASTA **(Railway Assets Summarised Tracking Application)** - அனைத்து இரயில்வே அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் பயன்பாட்டிற்காகவும், இரயில்வே சொத்துக்களை துல்லியமாக கணக்கிடவும் பயன்படுகிறது.
  - Yatri RASTA – **(Railway Approach to station Tracking**

**Application)** – என்ற செயலியானது பொது மக்கள் இரயில் நிலையங்களை எளிதில் கண்டுபிடிக்க உதவுகிறது.

- இந்தியாவின் முதல் புகையில்லா மாநிலமாக **(India First Smoke free State - Kerala)** கேரளா உருவாகியுள்ளது. தற்போது மாநிலம் முழுவதிலும் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் **100% LPG** வாயு இணைப்புகளை வழங்கியுள்ளன. இதன் மூலம் சமையலுக்காக மரங்களை வெட்டி எரிப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

- சுதந்திர போராட்டத் தலைவர் **நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 1943ம்** ஆண்டு ஆங்கிலேய அரசுக்கு எதிராக நிறுவிய ஆசாத் ஹந்த் அரசின் **75ம் ஆண்டு விழா டெல்லியில் அக்டோபர் 21ல்** நடைபெற்றது.
  - இவ்விழாவில் இந்திய பிரதமர் அவர்கள், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் போது சிறப்பாக செயல்படும் காவலர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் **நேதாஜி பெயரில் தேசிய விருது** வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.
- குறிப்பு
  - இவ்விருதானது நேதாஜியின் பிறந்த நாளான **ஜனவரி 23ம் தேதி** வழங்கப்பட உள்ளது.

We Shine Academy TM

## உலக நிகழ்வுகள்

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கிடையே கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் **(SCO – Shanghai co operation Organization)** உறுப்பு நாடுகளின் கல்வி அமைச்சர்களுக்கிடையேயான 7வது கூட்டம் கஜகஸ்தானின் தலைநகரான அஸ்தனாவில் நடைபெற்றது.

## விருதுகள்

- அமெரிக்க வாழ் இந்திய பெண் எழுத்தாளர் **சுஜாதா கித்லா** அவர்களுக்கு **2018ம் ஆண்டிற்கான சக்தி பட் பரிசு** வழங்கப்பட்டுள்ளது.

- ○ சுஜாதா கித்லா, **யானைகள் மத்தியில் எறும்புகள்: ஒரு தீண்டத்தகாத குடும்பமும், நவீன இந்தியா உருவாக்கமும்** என்ற முதல் புத்தகத்திற்காக 2018ம் ஆண்டிற்கான சக்தி பட் பரிசு பெறுகிறார்
- குறிப்பு
  - ○ 2017ம் ஆண்டு சக்திபட் பரிசு இலங்கை எழுத்தாளர் அனுக் அருட்பிரகாசத்தின் முதல் நாவலான சுருக்கமான திருமணத்தின் கதை என்ற நாவல் பெற்றது.

## புத்தகங்கள்

- இந்தியன் ஸ்போர்ட்ஸ்: கன்வெர்சேசன்ஸ் அண்டு ரிப்ளகஷன்ஸ் **(Indian Sports : conversation and Reflections)** என்ற தலைப்பிலான ஆங்கில புத்தகம் **விஜயன் பாலா**(Vijayan Bala) அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது.
  - ○ இந்தப் புத்தகம் **1971ம்** ஆண்டு முதலான இந்திய விளையாட்டு வீரர்களின் நேர்காணல்களின் தொகுப்பு ஆகும்.

We Shine Academy